# எழுப்புதல் தொனி

EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-
Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-



# தளர்ந்த முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்!

மலர்: 18 | Volume: 18 ஆகஸ்ட் 2022 | August 2022 இதழ்: 9 | Issue: 9



மல்கன்கிரி மாவட்டம் சித்ரகோண்டாவில் நடைபெற்ற கூட்டத்தில் செய்தியளிக்கும் நமது சகோதரர்.





லக்ஷ்மியூர் தொகுதி MLA திரு.பிரபு ஜானி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கோநிபெடாபொதர் ஆலயம், கோராபுட் மாவட்டம்.

# உங்கள் சகோதரனிடமிருந்து...



**இணையில்லாத இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்.**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, இந்த மாதத்திலும் தேவனுடைய பெரிதான கிருபையினாலே பத்திரிகை மூலமாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் சுகமாயிருக்கிறீர்களா? உங்கள் பிள்ளைகள் நன்றாக இருக்கிறார்களா? உங்கள் வீட்டிலே குடும்ப ஜெபம் நடக்கிறதா? அப்படியானால் குடும்ப ஜெபம் எவ்வளவு நேரம் நடக்கிறது? நீங்கள் குடும்ப ஜெபம் பண்ணும்போதுதான் இயேசு உங்கள் வீட்டிற்கு வருவார். ஏனென்றால் இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே கூடும் போது, நான் அங்கு வருவேன் என்று அவர் சொல்லியிருக்கிறாரே, இயேசு உங்கள் வீட்டிற்குள் வந்து உங்களை ஆசீர்வதிக்க இதயக்கதவைத் திறந்து கொடுங்கள். அப்பொழுது மரித்த எல்லா ஆசீர்வாதங்களையும் திரும்ப தேவன் உயிர்ப்பிப்பார்.

உங்கள் ஜெபத்தின் பலனாக கடந்த மாதத்திலே, கர்த்தர் கொண்டு சென்ற எல்லா இடத்திலும் தேவன் தமது வல்லமையை வெளிப்படுத்தினார். ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதுமாத்திரமல்ல, நீங்கள் எப்பொழுது ஜெபித்தாலும் நமது மிஷனெரிகளை நினைத்துக்கொள்ளுங்கள்.

நான் உங்களுக்காக ஒவ்வொருநாளும் நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபித்து வருகிகிறேன். தேவனுடைய கிருபையும் சமாதானமும் உங்களில் அதிகமாய் பெருகுவதாக!

எழுப்புதல் பணியில்,



**(T.ஆசீர் ஞானராஜ்)**

வங்கியின் மூலமாக பணம் அனுப்பும்போது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

**96294 99532**

Follow us youtube channel:
**Asir Gnanaraj**

24 மணி நேர ஜெப உதவிக்காக:
**94869 19522, 81909 25800**
**ஊழிய விபரங்களுக்கு: 96294 99532**
Email: calvarygospelmm@gmail.com

**https://www.youtube.com/channel/UCOKkrVUWceMTwtC2dKOl4zg (or)**



# தளர்ந்த முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்!

**நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்.**

**– எபிரேயர் 12:12,13**

## தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

பிரியமானவர்களே, நம்முடைய ஊழியமானது ஆரம்ப காலத்தில் ஒடிசா மாநிலத்தில் கோராபுட் மாவட்டத்தில் சிறு ஊழியமாக ஆரம்பிக்கப்பட்டது. அங்கே லம்டாபுட் என்ற சிறிய பட்டணத்தில் ஊழியம் செய்யத்துவங்கிய போது முதலாவதாக ஒரு சகோதரி இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசியாக மாறினார்கள். அந்த சகோதரி அதே பட்டணத்திலே முரட்டாட்டமுள்ள ஒரு மனிதருடைய மனைவி. அவர்கள் ஆலயத்திற்கு வந்த போது சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் எதிர்ப்பதை படிப்படியாக நிறுத்திவிட்டார்கள். ஏனென்றால் அங்கிருந்த தலைவனின் மனைவியே ஆராதனையில் பங்குகொள்ள வந்ததினால் எதிர்ப்பாளர்கள் சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதை குறைக்கத் தொடங்கினர். அந்த சகோதரி பின்பு நம்மோடு இணைந்து ஊழியத்தை செய்யத் துவங்கினார்கள் அதன் மூலமாக ஒன்று இரண்டு என்று குடும்பம் குடும்பமாக ஆண்டவரிடத்தில் ஜனங்கள் வந்தார்கள். அந்த இடத்திலே கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக பெரிய ஆலயம் ஒன்று கட்டப்பட்டது.

இன்றைக்கு அந்த ஆலய ஆராதனையில் கிட்டத்தட்ட அறுநூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்கிறார்கள். அந்த சகோதரி அதிக ஆத்தும பாரமுள்ளவர்கள். அவர்கள் எப்பொழுது ஜெபித்தாலும் அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக அழுது கண்ணீரோடு ஜெபிப்பார்கள். ஒரு பக்கம் ஆத்துமாக்களை நினைத்து அழுதார்கள். மறுபக்கம் தன்னுடைய கணவனுடைய துன்மார்க்கமான செய்கை, பரிசுத்தமில்லாத வாழ்க்கை, ஆஸ்திகளையெல்லாம் தாறுமாறாய்

அழிக்கத்துவங்கியதை நினைத்து அழுதார்கள். பலமுறை சரீரத்தில் வியாதியினால் பாதிக்கப்பட்டு மரணத்திற்கு சமீபமாய் அவர் இருந்தார். அப்படிப்பட்ட நாட்களில் பாடுகளோடு கூட அவர்கள் ஆண்டவரே என் கணவரை இரட்சித்து இந்த இடத்தில் என்னை சாட்சியாக நீர் நிறுத்த வேண்டும் என்று அவர்கள் வைராக்கியமாக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். நான் தமிழ்நாட்டிலிருந்து போகும்போதெல்லாம் ஒருவேளை சாப்பாட்டை அந்த சகோதரி எனக்காக தயாரித்து கொடுத்து விடுவார்கள். அண்ணன் சாப்பிட்டு எங்களை ஆசீர்வதிக்க வேண்டும். என்னுடைய கணவரை ஆண்டவர் இரட்சிக்க வேண்டும் என்பார்கள். பாடுகள் நெருக்கம் வரும்போது அந்த மனிதர் ஆண்டவரை நோக்கி வருவார். சுகமடைந்தவுடனே பின்வாங்கிப் போய் விடுவார். மனந்திரும்ப வேண்டுமென்ற உணர்வு உண்டு ஆனாலும் பாவத்தின் அடிமைத்தனம் அவரை அழுத்தி பிடித்து வைத்திருந்தது. கடந்த ஆண்டு நான் பணித்தளத்திற்கு சென்ற போது என்னை பார்த்து அண்ணன் இந்த பாவத்தை விட்டு விட வேண்டுமென்று நான் நினைக்கிறேன். ஆனால் என்னால் முடியவில்லை. எனக்காக ஜெபித்து கொள்ளுங்கள். ஆனால் நான் சீக்கிரத்திலே ஞானஸ்நானம் எடுப்பேன் என்று சொல்லிவிட்டு போனார். அதற்கு பிற்பாடு அவர் சுகவீனப்பட்டு கடைசியாக மரித்து போய்விட்டார். அந்த சகோதரி மிகவும் சோர்ந்து போய் விட்டார்கள். அவர்களுடைய இருதயத்தின் கேள்வியெல்லாம் ஆண்டவரே என் கணவரை இரட்சித்து இந்த பட்டணத்திற்குள்ளே சாட்சியாக நிறுத்துவீர் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் எனக்கு பெரிய ஏமாற்றத்தை நீர் கொடுத்துவிட்டீர். ஏன் என் கணவரை எடுத்துக்கொண்டீர்? இப்போது என் கணவர் எங்கு இருக்கிறார். எத்தனை ஆண்டுகள் நான் ஜெபித்தேன். எத்தனை ஆண்டுகள் நான் உபவாசித்தேன். என் ஜெபம் பலன்கொடுக்கவில்லையா என்று அழுது புலம்பி கண்ணீர் வடித்துக்கொண்டேயிருந்தார்கள். வீட்டில் கணவருடைய புகைப்படத்தை பார்த்துக்கொண்டு அவருடைய ஆத்துமா எங்கே போனது என்று தெரியவில்லையே என்று கலக்கத்தோடு கூட அழுது கொண்டேயிருந்தார்கள். சரியானபடி அவர்களால் பிள்ளைகளை கவனிக்க முடியவில்லை. துக்கம் நிறைந்த சூழ்நிலையில் அவர்கள் இருக்கும் போது ஒரு நாள் இரவிலே ஆண்டவர் தரிசனம் ஒன்றை காண்பித்தார். அந்த தரிசனத்தில் ஒருவர் வந்து அவர்கள் வீட்டின் கதவை தட்டுகிறார். அப்பொழுது இந்த சகோதரி யாராக இருக்குமென்று எண்ணி கதவைத் திறந்தவுடனே வெண்வஸ்திரம் தரித்தவராக உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கைகளிலும் கால்களிலும் ஆணிகள் பாய்ந்த காயங்களோடு கூட அவர்கள் வீட்டிற்குள் கடந்து வந்தாராம். அப்பொழுது இயேசு பின்னால் திரும்பி ஒருவரை பார்க்கிறார். உடனே, இந்த சகோதரி இயேசு யாரை பார்க்கிறார் என்று கவனித்தபோது, இயேசுவிற்கு பின்னால் வெண்வஸ்திரம் தரித்தவராக அந்த சகோதரியின் கணவரும் வருகிறார். அவர் உள்ளே வந்து அந்த சகோதரியின் பெயரை சொல்லி நான் இயேசுவோடு சந்தோஷமாக இருக்கிறேன். நீ ஏன் அழுது கொண்டிருக்கிறாய்? என்று அவர் கேட்ட போது இந்த சகோதரி

**பதறிக்கொண்டு இயேசுவே என்று சத்தமிட்டு கண்விழித்து எழுந்தார்கள். அந்நேரம் அதிகாலை நான்கு மணி. அப்பொழுது, சத்தமிட்டு ஆண்டவரை துதிக்க ஆரம்பித்தார்களாம். இயேசு என் ஜெபத்தை கேட்டார். என் விசுவாசம் வெறுமையாய் போகவில்லை. என் உபவாசம் வெறுமையாய் போகவில்லை. இயேசு என் ஜெபத்தைக் கேட்டார். என் ஜெபத்தைக் கேட்ட ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் என்று ஆண்டவரை மகிமைப்படுத்தினார்கள். படுக்கையிலிருந்து பிள்ளைகள் எல்லாம் எழுந்திருந்தார்கள். அந்த சகோதரி தன் பிள்ளைகளிடம் உங்கள் அப்பா பரலோகத்திலிருக்கிறார். இயேசு அவரை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார் என்று அவர்கள் கண்ட தரிசனத்தை சொன்னார்களாம். தாயாரோடு கூட அவர்களும் கூடி ஜெபித்தார்கள்.**

*பிரியமானவர்களே, ஆண்டவர் ஜெபத்தைக் கேட்கிறவர். ஜெபிக்கிற ஒரு மனிதன் இந்த பூமியிலே மரித்து மண்ணோடு போனாலும் அவனுடைய ஜெபங்கள் மரித்து போவதில்லை. அது தேவ சமூகத்திலே இரும்பு எழுத்திலே எழுதப்பட்டதாய் இருக்கிறது. அதற்கு தேவன் நிச்சயமாக பதில் கொடுப்பார்.*

***ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள். – எபிரேயர் 12:12,13***

*ஒருவேளை கலக்கத்தோடு கூட நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கலாம். ஜெபிக்கிறேன். ஆனால் என் வாழ்க்கையில் ஒன்றுமே நடக்கவில்லையே என்ற துக்கத்தோடு நீங்கள் இருக்கலாம். இயேசு என் ஜெபத்தை கேட்கிறாரா அல்லது நானாக புலம்பிக்கொண்டிருக்கிறேனா, ஒரு மாற்றமும் இல்லையே என்று அங்கலாய்ப்போடு கூட நீங்கள் இதை வாசிக்கலாம். அப்படியல்ல உங்கள் ஜெபம் கேட்கப்படுகிறது. இயேசுவே என்று முழங்காலில் நின்று நீங்கள் ஆண்டவரை நோக்கி கூப்பிடும் போது அவர் உங்களிடத்தில் வருகிறார். உங்கள் ஜெபத்தை அவர் கேட்கிறார். இயேசுவை நோக்கி சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அவர் கேட்டுக்கொண்டேயிருக்கிறார். ஆனால் ஏற்ற காலத்திலே*


WANTED

# முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

**அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய**

**வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.**

**முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

**திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.**

**தொடர்புக்கு: 96294 99532, 94869 19522.**

*அதனுடைய பிரதிபலனை உங்களிடத்திற்கு அவர் நிச்சயமாக கொண்டு வருவார். உங்கள் விசுவாசத்தை ஆண்டவர் கனம்பண்ணக் கூடியவராய் இருக்கிறார். விசுவாசமுள்ள ஜெபத்தை ஆண்டவர் ஏற்றுக்கொள்கிறார். அது நிச்சயமாய் பலனைக்கொண்டு வரும்.*

**ஒரு கடற்கரை கிராமத்திலே ஊழியக்காரர் தேவனுடைய தரிசனத்தோடு புறப்பட்டு தனி மனிதனாக அந்த கிராமத்தில் தங்கியிருந்து ஊழியம் செய்தார். கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் அந்த ஒரே கிராமத்திலே தங்கியிருந்து வீடுகள்தோறும் இயேசுவைக் குறித்து சொல்லிக் கொண்டேயிருந்தார். தினமும் காலையிலும் இரவிலும் இரண்டு வேளையும் அந்த கிராமத்திற்காக அங்குள்ள கடற்கரையில் முழங்கால்படியிட்டு சில மணி நேரம் கண்ணீரை சிந்தி அவர் ஜெபிப்பதுண்டு. அவர் திருமணமாகாத சந்நியாசியாக ஊழியம் செய்தார். அவரே சமைத்து சாப்பிடுவார். ஆனால் இருபது ஆண்டு கால ஊழியத்திலே கடைசியாக அவர் மிகவும் சோர்ந்துபோய்விட்டார். வீடுகள்தோறும் போய் விசாரிக்கிறேன். வீடுகள்தோறும் ஜெபிக்கிறேன் ஆனால் ஒரு ஆத்துமா கூட மனந்திரும்பவில்லையே என்னுடைய இருபது ஆண்டுகால ஊழியம் தோல்வியில் முடிந்துவிட்டதா என்று மிகுந்த மன வேதனைக்குள்ளே அவர் தள்ளப்பட்டார். கடைசியாக இனி இந்த கிராமத்தை விட்டு போய்விட வேண்டும். இந்த கிராமத்திலிருந்து நாம் காலத்தை மிகவும் வீணாக்குகிறோம் என்று அவர் உள்ளத்தில் சிந்தித்தார்.**

**அவர் மிகுந்த வருத்தத்தோடு கூட அவருடைய பெட்டி படுக்கையை எடுத்தார். கதவை பூட்டி அந்த வீட்டின் உரிமையாளரிடத்தில் சாவியை கொண்டு போய் கொடுக்கும் போது அந்த வீட்டின் உரிமையாளர் ஐயா, நீங்கள் ஏன் இங்கிருந்து செல்கிறீர்கள் இங்கேயே இருந்து இயேசுவை பற்றி சொல்லலாமே. நாங்கள் கேட்டுக்கொண்டு தானே இருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்போது இந்த ஊழியக்காரர் அவர்களை பார்த்து நீங்கள் இயேசுவைப் பற்றி கேட்டுக்கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் யாரும் இயேசுவை பின்பற்றவே இல்லை. அதனால் நான் இந்த கிராமத்தை விட்டு போகிறேன் என்று சொல்லி அவர் பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு அந்த கிராமத்திலிருந்து அழுது கொண்டே புறப்பட்டார். அந்த கிராமத்திற்குள் வரும்போது மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் வந்தார். ஆனால் போகும் போது துக்கமாய் போனாராம். ஊருக்கு வெளியே வந்து முழங்காலில் நின்று ஆண்டவரே என் ஊழியம் பொய்த்து போய்விட்டதா இருபது ஆண்டுகளாக ஊழியத்தை நான் எவ்வளவு நம்பிக்கையாய் செய்தேன் என்று அழுது முடித்து அந்த இடத்திலிருந்து எழும்பின போது வேகமாக ஒடி வந்து ஒருவன் அவருடைய கையைப் பிடித்தான். திரும்பி பார்த்த போது முடமாய் கிடந்த ஒரு வாலிபன் நன்றாக நடந்து வந்து அவரின் கையை பிடித்திருந்தான். அந்த வாலிபனுக்காக அவர் அந்த தெருவிற்கு போகும்போதெல்லாம் ஜெபித்துக்கொடேயிருந்தாராம். இருபத்தொரு வயது நிறைந்த அந்த வாலிபன் படுக்கையில் முடமாய் எலும்பில் வந்த வியாதியினால் கால்கள் முடங்கி நடக்க முடியாமல் கிடந்தவன் எழுந்து நிற்பதை அவர்**

**பார்த்தபோது கண்களை மூடி அதிகமாய் ஆண்டவரை துதித்தாராம். கண்களை திறந்து பார்த்த போது முழு கிராம மக்களும் அவரை தேடி ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.**

*தளர்ந்த கைகளை நிமிர்த்தி தள்ளாடுகிற முழங்காலை உறுதிப்படுத்துங்கள். உங்கள் விண்ணப்பத்தின் சத்தத்தை ஆண்டவர் கேட்டார். உங்கள் ஜெபத்திற்கு பதில் உண்டு. ஒருவேளை காலங்கள் கடந்து போகலாம். ஆனால் இயேசுவின் நாமத்தில் நீங்கள் ஜெபிக்கிற விண்ணப்பங்களுக்கெல்லாம் நிச்சயமாகவே பதில் உண்டு. நிச்சயமாகவே உங்கள் கண்ணீர் மாறும். வேதனை மாறும். யாருடைய இரட்சிப்பிற்காக புலம்புகிறீர்களோ அதையெல்லாம் ஆண்டவர் பார்த்துக்கொண்டேயிருக்கிறார். அவர்களுக்கு இரட்சிப்பைத் தருவார். உங்கள் விண்ணப்பத்திற்கு பதில் நிச்சயமாக உண்டு. ஆகவே ஜெபத்திலே நாம் சோர்ந்து போய்விடக் கூடாது. நாம் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டேயிருக்க வேண்டும்.*

*பிரியமானவர்களே, எலியா தீர்க்கதரிசி தன் நாட்களிலே விசுவாசமுள்ள ஜெபத்தினாலே, பின்வாங்கிப் போன இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் பக்கமாகத் திருப்பினான்.*

***...பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ போய்ச் சமுத்திரமுகமாய்ப் பார் என்றான்; அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான்; நீ இன்னும் ஏழுதரம் போய்ப் பார் என்றான். ஏழாந்தரம் இவன்: இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது என்றான். – 1இராஜா.18:42–43***

*எலியாவினுடைய நாட்களிலே இஸ்ரவேல் ஜனங்கள் முழுவதுமாய் விக்கிரகத்தை பின்பற்றி தேவனை வருத்தப்படுத்தி வேதனைப்படுத்தி தேவனை விட்டுத் தூரமாய் சோரம் போன நிலையில் இருந்தார்கள். அந்நாட்களிலே இஸ்ரவேலிலே ஆகாப் என்ற ஒரு ராஜா இருந்தான். அவனுடைய மனைவி யேசபேல் விக்கிரகத்தின் அடிமைத் தனத்திலே இருந்தாள். தேசம் முழுவதும் தேவனை விட்டு விலகிப் போய்விட்டது. எலியா தேசத்தை உற்று கவனித்துப் பார்த்தான். தேசத்தின் ஜனங்கள் எல்லாரும் புசித்து குடித்து அவர்கள் திருப்தியடைந்தவர்களாக இருந்தார்கள். ஆனாலும் ஆராதனை இல்லை தீர்க்கதரிசிகள் இல்லை வசனம் இல்லை. ஜனங்கள் ஆண்டவரை தேடுகிறவர்களாய் இல்லை. அதை அறிந்த எலியா இரவும் பகலும் தன் சொந்த தேசத்திற்காக திறப்பிலே நின்று அழுது புலம்ப ஆரம்பித்தான். நம்மைப் போல பாடுள்ள எலியா, ஆனால் அவனுடைய இருதயத்திலே இருந்த வைராக்கியம் எப்படியாகிலும் தேவ ஜனங்களை தேவன் பக்கமாய் திருப்ப வேண்டும். மாயையை விட்டு ஜனங்கள் ஜீவனுள்ள தேவனை நோக்கி திரும்ப வேண்டும் என்ற வைராக்கியத்தோடு இரவும் பகலும் ஜெபித்துக்கொண்டேயிருந்தான். ஜெபித்து ஜெபித்து பரலோகத்தை எலியா திறந்தான். அவன் ஜெபத்தின் மூலமாக பரலோகம் திறக்கப்பட்டது. எலியாவின் ஜெபம் என்ன? தேவனே, நீர்*

வருடந்தோறும் மழையையும், பனியையும் இந்த ஜனங்களுக்கு கொடுத்ததினால் இவர்கள் விதைத்து அறுத்து புசித்து குடித்து உமக்கு விரோதமாய் பாவம் செய்யத் துணிகரங்கொண்டார்கள். ஆகவே நீர் வானத்தை அடைத்துப் போட வேண்டும் என்று கருத்தாக ஜெபத்தை ஏறெடுத்தான்.

பிரியமானவர்களே, கட்டுக்கட்டாக பணமிருந்தாலும் கட்டி கட்டியாக பொன் இருந்தாலும் வானம் திறந்து மழை வராமல் பூமியிலே தானியம் வராது. ஏனென்றால் ஜனங்களின் ஆகாரத்தை தேவன் ஆகாயத்திலே கட்டி வைத்திருக்கிறார் என்பதை எலியா உணர்ந்து நீர் வானத்தை அடைக்க வேண்டும் என்று ஜெபித்தான். நீர் வானத்தை அடைத்தாலொழிய இந்த ஜனங்கள் உம்மிடத்தில் திரும்ப மாட்டார்கள் என்ற எலியாவினுடைய ஜெபம் தேவனுடைய பார்வையிலே உகந்ததாய் இருந்தது. தேவன் அவனுடைய ஜெபத்திற்கு ஆம் என்று சொன்னார். மூன்று வருடமும் ஆறு மாதமும் மழை பெய்யாதபடிக்கு வானம் அடைக்கப்பட்டது. வானத்தை அடைத்து அதன் திறவுகோலை எலியா கையிலே வைத்திருப்பவன் போல அதிகாரத்தோடு கூட ஜனங்கள் கூடக் கூடிய சந்தைவெளியிலே வீதியிலே அரண்மனைக்கு முன்பாக நின்று கொண்டு என் வாக்கின்படியே அன்றி வானத்திலிருந்து மழையோ பனியோ பெய்யாது என்றான். எலியாவினுடைய சத்தத்தை பைத்தியக்காரனின் சத்தம் போல அரண்மனையில் உள்ளவர்கள் நினைத்திருக்கலாம். ஜனங்களும் அலட்சியம்பண்ணியிருக்கலாம்.

ஒரு வருடம் போனது இரண்டு வருடம் போனது மூன்றாவது வருடமும் மழை இல்லாமல் போன போது ஜனங்கள் ஆகாரத்திற்காக தடுமாற ஆரம்பித்தார்கள். அரண்மனையிலே அங்கிருக்கக் கூடிய கோவேறு கழுதைகளுக்கோ, குதிரைகளுக்கோ, ஆடு, மாடுகளுக்கோ தீவனம் இல்லாமல் போயிற்று. தேசமே தண்ணீரில்லாமல் புலம்பியது. அதனிமித்தமாக தானியம் ஒன்றுமில்லாமல் தேசம் துடைத்துப்போடப்பட்டது. அந்த சமயத்திலே எலியா தேவனாலே காக்கப்பட்டான். கேரீத் ஆற்றங்கரையிலே சில காலம், சாறிபாத் விதவையின் வீட்டிலே சில காலம் இப்படியாக தேவன் அவனை போஷித்து நடத்தினார். ஒரு நாளிலே தேவன் எலியாவை நோக்கி, நீ போய் உன்னை ஆகாபுக்கு காண்பி என்று சொன்னார். ஒரு நாள் அலட்சியம் பண்ணப்பட்ட தீர்க்கதரிசனம் அரண்மனையிலே மிக முக்கியமான காரியமாய் பேசப்பட்டது. தள்ளப்பட்ட எலியாவின் வார்த்தை மிக முக்கியமாக பேசப்பட்டது. மந்திரவாதிகளுக்கும் மேலான ஒருவன் வானத்தை என் வார்த்தையினாலே அடைப்பேன் என்று அடைத்து போட்டுவிட்டான். அவன் வார்த்தையின்படியே மூன்று வருடமும் ஆறு மாதமும் மழை இல்லை. அவன் எங்கிருக்கிறான் அவனைப் பிடியுங்கள் என்று ராஜா கட்டளையிட அவனை தேடாத கிராமமும் இல்லை, அவனைத் தேடாத பட்டணமும் இல்லை. ஆனால் ஒருநாள் ஆகாபுக்கு தன்னை காண்பிக்கும்படிக்கு ஒபதியா முன்பாக எலியா போய்

நின்று உன் ஆண்டவனிடத்திலே போய் எலியா வந்துவிட்டேன் என்று சொல்லு என்றான். ஆகாப் அந்த வார்த்தையை கேட்டவுடனே எலியாவை சந்திக்க வந்தான். எலியாவைப் பார்த்து இஸ்ரவேலை கலங்கப் பண்ணுகிறவன் நீ தானா என்று கேட்டான். ஏனென்றால் எலியாவைப் பார்த்தால் பெரிய பராக்கிரமசாலியாக தெரியவில்லை. ஐசுவரியவானாய் தெரியவில்லை. சாதாரணமான அற்பமான மனிதனாய் எலியா இருந்தான். நீயா கலங்கப்பண்ணினாய் என்று ஆகாப் கேட்ட போது எலியா அவனைப் பார்த்து நான் இல்லை நீயும் உன் தகப்பன் வீட்டாருமே தேவ ஜனங்களை பாவம் செய்ய வைத்து இஸ்ரவேலரை கலங்கப்பண்ணினீர்கள் என்றான். வைராக்கியத்தோடு கூட தேவ ஜனங்களை கூட்டிச் சேர்த்து பாகால் தீர்க்கதரிசிகள் நானூற்று ஐம்பது பேர் வரட்டும். காளை பலிசெலுத்தப்படட்டும் அவர்கள் அவர்களுடைய தெய்வத்தை நோக்கி கூப்பிடட்டும் நாங்கள் எங்கள் தேவனை கூப்பிடுவோம். அக்கினியின் மத்தியில் உத்தரவு அருளுகிற தெய்வமே உண்மையான தெய்வம் என்று அறைகூவல் விடுத்தான். இது நல்ல காரியம் என்று ஆகாப் சொல்லி அதைப் போல எல்லா ஜனங்களையும் கூட்டிச் சேர்த்தான்.

பிரியமானவர்களே, நம்முடைய தேவன் அக்கினியின் மத்தியில் உத்தரவு கொடுக்கிறவர். சகல இஸ்ரவேல் ஜனங்களும் கூடி வந்த போது, எலியா அவர்கள் மத்தியிலே நின்று, பாகாலின் தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் அநேகராய் இருக்கிறபடியால், முதலாவது நீங்கள் ஒரு காளையைப் பலி செலுத்தி உங்கள் தேவனை நோக்கி கூப்பிடுங்கள். அக்கினியினாலே, பலி பொருளை பட்சிக்கிற தேவனே தேவன் என்று கூறினான். அந்தபடியே, எல்லா பாகாலின் தீர்க்கதரிசிகளும் ஒரு காளையை பலி செலுத்தி காலை முதல் மாலை வரை அக்கினி வரவேண்டுமென்று அவர்கள் தேவனை நோக்கி கூப்பிட்டார்கள். அக்கினி வரவில்லை. எலியா பரியாசம் பண்ணி விட்டு அவன் இஸ்ரவேல் கோத்திரத்தின் அடையாளமாக பன்னிரெண்டு கற்களை எடுத்து வைத்து பலிபீடத்தை கட்டி காளைகளை துண்டித்து அதன்மீது வைக்கும்படி செய்து நான்கு குடம் தண்ணீரை கொண்டு வந்து ஊற்றுங்கள் என்று சொன்னான். இரண்டாந்தரம் ஊற்றுங்கள் மூன்றாந்தரமும் ஊற்றுங்கள் என்று சொல்லி பன்னிரெண்டு குடம் தண்ணீர் ஊற்றப்பட்டு பலிபீடத்தை சுற்றி தோண்டப்பட்டிருந்த பள்ளங்கள் எல்லாம் தண்ணீரால் நிறைந்த போது அவன் தேவனை நோக்கி கூப்பிட்டவுடன் தேவன் பரலோகத்திலிருந்து அக்கினியை அனுப்பினார். அந்த அக்கினி இறங்கினவுடனே எல்லாரும் தாழ விழுந்து கர்த்தரே தெய்வம் என்றார்கள். முழு தேசமும் தேவன் பக்கமாய் திரும்ப தேவன் ஒரே மனிதனை பயன்படுத்தியதை நாம் பார்க்கிறோம்.

**சீன தேசத்திலே வைராக்கியமாய் ஊழியம் செய்த வாட்ச்மேன் நீ என்ற தேவ மனிதருடைய புத்தகத்தை நான் வாசித்தேன். அவர் கல்லூரியில் படிக்கும்போது விடுதியில் தங்கியிருந்தார். அப்போது சக மாணவர்களில் ஜெபிக்கிற சிலரை தெரிந்து கொண்டு அவர்களோடு இணைந்து எப்பொழுதும் தனது**

தேசத்திற்காக ஜெபிக்கும் வழக்கத்தை கொண்டிருந்தார். விடுமுறை நாட்களில் அவர்கள் பக்கத்திலிருந்த கிராமங்களில் இயேசுவைக் குறித்து சொல்லத் தொடங்கினார்கள். அப்படி அவரும் அவரது நண்பர்கள் சிலருமாக சீன தேசத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு பெரிய கிராமத்தில் சுவிசேஷத்தை அறிவித்தார்கள். ஒருவரும் ஆண்டவருக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் தங்குவதற்கு மாடுகளுக்கு வைக்கோல் வைக்கும் பரணிலே கொஞ்சம் இடம் கொடுத்தார்கள். சில நாட்கள் அவர்கள் அதிலே தங்கி ஊழியம் செய்தார்கள். அப்படி அவர்கள் சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டிருக்கும்போது அந்த கிராமத்திலே பிரதானமான ஒரு சிலர் எங்கள் கிராமத்திலிருக்கிற தெய்வத்தைப் பார்க்கிலும் உங்கள் தேவன் பெரியவரா என்று கேள்வியை எழுப்பினார்கள். எங்கள் கிராமத்தில் எங்கள் தெய்வத்திற்கு விழாவை கொண்டாடக்கூடிய நாட்களிலே திரளான மக்களாக நாங்கள் கூடி வருவோம். நாளைய தினம் அந்த பண்டிகை நடைபெற இருக்கிறது. கடந்த 286 வருடங்களாக பண்டிகை நாளில் மழை வந்ததில்லை என்று பெருமையுடன் சொன்னார்களாம். வாட்ச்மேன் நீயும் அவரோடு சேர்ந்தவர்களும் மக்களுக்கு பிரதியுத்திரமாக விழா நடக்காது. தேவன் வானத்திலிருந்து கனமழையை கொண்டு வருவார். அப்பொழுது நாங்கள் சொல்லுகிற தேவனே உண்மையான தெய்வம் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள் என்று சொன்னார்கள். அப்பொழுது அந்த மக்கள் நீங்கள் சொல்லுகிறதைப் போல நடந்தால் நாங்கள் அனைவரும் உங்கள் தெய்வத்தை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். நீங்கள் சொன்னது போல மழை வரவில்லையென்றால் உங்கள் கழுத்தில் தலை இருக்காது என்று எச்சரித்துள்ளனர். இந்த சகோதரர்கள் காலையில் எழும்பும் போதே சூரியஒளி கடுமையாக இவர்கள் மேல் வீசியிருக்கிறது. அப்பொழுது எல்லோரும் சேர்ந்து வைராக்கியமாக ஜெபித்திருக்கிறார்கள். ஆண்டவரே, நீர் ஜீவனுள்ள தெய்வம் என்பதை இப்பொழுதே வெளிப்படுத்தும் இந்த நாளில் கிராம மக்களுக்கு வெளிப்படுத்தும் என்று ஜெபித்தார்களாம். அவர்கள் ஜெபித்துக் கொண்டேயிருந்தார்கள். ஏனென்றால் கீழே இறங்கி போக முடியாது. மழை வந்தே ஆக வேண்டும். ஒரு மணி நேரம், இரண்டு மணிநேரம், மூன்று மணிநேரம் என்று ஜெபித்துக்கொண்டே இருந்தார்கள். அவர்கள் ஜெபிக்க ஜெபிக்க மேகம் கருத்தது. மழை பெய்ய ஆரம்பித்தது. கோடைக் காலத்திலே பலமாய் வானம் திறக்கப்பட்டு மழை ஊற்றப்பட்டது. எல்லா இடங்களிலும் வெள்ளம், சகோதரர்கள் அனைவரும் தேவனை துதித்தார்கள். அந்த கிராமத்தில் உள்ள ஜனங்கள் இயேசுவை கண்டு கொண்டார்கள்.

ஒரு முறை நம்முடைய ஒடிசா மாநில பணித்தளத்திலே மிஷனெரிகள் காரில் சென்று கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று சாலையில் வாகன நெரிசல் ஏற்பட்டது. சிறிது நேரம் வாகனம் அந்த இடத்தில் நின்றிருக்கிறது. அப்பொழுது நம்முடைய ஊழியர் ஒருவர் போய் என்ன நடக்கிறது என்று பார்க்க சென்றிருக்கிறார். அப்போது ஐந்து மந்திரவாதிகள் சேர்ந்து ஒரு பிராமண சகோதரிக்கு பிசாசு ஓட்டுகிறேன் என்று சொல்லி ஐந்து பேரும்அவர்கள் கையில் உள்ள சவுக்கால் அடித்து அடித்து அதினிமித்தம் அந்த சகோதரியின்

**உடைகள் கிழிந்து சரீரத்தில் இரத்தமாக வழிந்திருக்கிறது. அந்த சகோதரியின் தலைமுடியை பிடித்து இழுத்து பேய் ஓட்டிக் கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்த நமது மிஷனெரி இப்படி பிசாசை துரத்தினால் பிசாசு போகாது இயேசுவின் நாமத்தினால் மாத்திரமே சாத்தான் ஒரு மனிதனை விட்டு வெளியே போவான் நீங்கள் விலகுங்கள் என்று இயேசுவின் நாமத்தை சொல்லி கட்டளையிட்டு இவர் ஜெபித்த போது போக முடியாது என்று சொன்ன அசுத்த ஆவி அந்த சகோதரியை அலைக்கழித்து அந்த இடத்திலே உருண்டு புரண்டு வெளியே சென்றது. இயேசுவின் நாமம் அங்கு மகிமைப்பட்டது. அங்கு கூடியிருந்த மக்கள் இயேசுவை விசுவாசித்தார்கள். அந்த இடத்தில் தற்பொழுது ஒரு ஆலயம் கட்டப்பட்டுள்ளது.**

*எலியாவின் தேவன் நம்முடைய தேவன். நம்முடைய ஜெபத்தை கேட்கிற ஆண்டவர். நம்முடைய ஜெபத்தை ஒரு போதும் தள்ளாத ஆண்டவர். தேசமே எதிர்பார்க்கிறது. ராஜா எதிர்பார்க்கிறார் எலியா வானத்தை திறப்பதற்காக அனைவரும் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கின்றனர். அவன் கர்மேல் மலையின் சிகரத்தில் ஏறினான். ஜெபத்தின் உச்சகட்ட நிலைக்கு சென்றான். அவன் நெற்றி முழங்காலில்படும் மட்டும் தன்னைத் தாழ்த்தி பணிந்து ஜெபித்தான். பெரிய பெரிய அற்புதங்களை செய்து விட்டால் நான் அற்புதம் செய்து விட்டேன் என்று அநேகர் பெருமை கொள்வார்கள். ஆனால் எலியா தான் பெரிய காரியத்தை சாதித்து விட்டோம் என்று தன் உள்ளத்திலே நினைக்கவில்லை. பெருமை கொள்ளவில்லை அவன் தன்னை தாழ்த்தினான். எலியா தனது உடன் ஊழியக்காரனை நோக்கி: நீ சமுத்திரமுகமாய் போய் பார் என்று சொன்ன போது அவன் போய் திரும்பி வந்து ஒன்றுமில்லை என்றான். எலியா அவனை நோக்கி: நீ இன்னும் ஏழு முறை போய் பார் என்ற போது ஏழாந்தரம் அவன் பார்த்து திரும்பி வந்து உள்ளங்கை அளவு மேகம் உள்ளது என்றான்.அந்த உள்ளங்கை அளவு மேகத்தை எலியா விசுவாசித்து ஆகாபை துரிதப்படுத்தினான். அந்த பலமுள்ள விசுவாசம் மிகப்பெரிய அசைவை உண்டாக்கியது. வானம் திறக்கப்பட்டு மழை ஊற்றப்பட்டது.*

**கடந்த மாதம் நான் பணித்தளத்திற்கு சென்ற போது நான்கு இடங்களிலே கூட்டங்களை ஒழுங்கு செய்திருந்தார்கள். நான் அங்கு சென்ற போது ஆண்டவரிடத்தில் முழங்கால் படியிட்டு ஜெபித்தேன். ஆண்டவரே, இந்த நான்கு நாட்கள் மழை பெய்யக் கூடாது. இயேசுவின் நாமத்தினால் நான் வானத்தை அடைக்கிறேன் என்று சொல்லி ஜெபித்தேன். அப்பொழுது, என் ஜெபத்தில் ஆவியானவர் என்னோடு கூட இணைந்து கொள்ளவில்லை. நானாக புலம்பியது போல இருந்தது. நான் சிந்தித்துக் கொண்டிருந்த போது ஆண்டவர் என்னோடு பேச ஆரம்பித்தார். ஜனங்கள் எல்லோரும் இந்த நாட்களிலே விதைப்பதற்கு தானியங்களை கையில் வைத்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீ மழையை அடைக்கும்படிக்கு என்னிடம் ஜெபிக்கிறாய் நான் உன்னை இந்த ஜனங்களுக்கு ஆசீர்வாதமாகத் தான் கொண்டு வந்தேன். இப்போது இந்த ஜனங்கள் விதைத்து அறுக்கிற காலமாயிற்றே. இப்படிப்பட்ட காலங்களில் நீ கூட்டங்களை ஒழுங்கு செய்வது கூடாது. இந்த முறை நான் உன்னை மன்னித்து உன் ஜெபத்தை**

நான் கேட்டு வானத்தை அடைப்பேன். ஆனால் எந்த இடத்தில் நீ ஊழியத்தை நிறைவேற்றுகிறாயோ அந்த இடத்தில் நீ ஊழியத்தை முடித்த பின்பு வானம் திறக்கும்படியாக மறுபடியும் ஜெபிக்க வேண்டும். அப்போது அங்கு மழை பெய்யும் என்று ஆண்டவர் சொன்னார். அதைப் போல முதல் நாள் ஊழியத்தை முடித்து சாப்பிட்டு வெளியே புறப்படும் போது அந்த இடத்திலே நின்று ஆண்டவரிடத்தில் வானம் திறக்கப்பட வேண்டும் என்று நான் ஜெபித்து விட்டு வாகனத்தில் ஏறி ஒரு கி.மீ தூரம் போகும் முன்பாக கனமழை அந்த பகுதியில் பெய்ய ஆரம்பித்தது. இரண்டாவது நாள் ஐந்தாயிரம் அடி உயரத்திலே இருக்கும் உயரமான மலைக் கிராமத்திலே கூட்டம் நடந்தது. ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கூடியிருந்தார்கள். மரக்கிளையினாலே பந்தல் அமைத்திருந்தார்கள்.

அந்த நாளிலே ஊழியம் ஆசீர்வாதமாய் நடந்தது. அற்புதங்கள் நடந்தது. ஏராளமான ஜனங்கள் மந்திரவாதம் மற்றும் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள். எல்லாம் முடிந்த போது எனக்கு நல்ல பசி எடுத்தது. அப்போது நான் எனக்கு சாப்பாடு கொடுங்கள் என்று கேட்டேன். சாப்பாடு வந்தது சாப்பாட்டில் கை வைத்த போது ஆண்டவர் வானத்தை திறந்து விடு என்று என்னோடு பேசினார். உடனே நான் ஆண்டவரே வானம் திறக்கப்படட்டும் என்று அந்த இடத்திலே ஜெபித்தேன். சாப்பாட்டை எடுத்து வாயில் வைக்க முடியவில்லை உடனே மழை கொட்ட ஆரம்பித்தது. இலையில் போட்ட சாப்பாட்டை மடித்து எடுத்துக் கொண்டு அங்குள்ள ஒரு வீட்டிற்குள் சாப்பாட்டை வைத்தார்கள். அங்கு சாப்பிட்டு விட்டு நனைந்து கொண்டே பிரயாணத்தை துவங்கினோம்.


# எழுப்புதல் உபவாச ஜெபம்

**நாள் : 03.09.2022 முதல் சனிக்கிழமை**

**நேரம்: காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரை**

தேவ செய்தி:

சகோ. **T. ஆசீர் ஞானராஜ்**

**இடம்: எழுப்புதல் ஜெப மையம், முதலூர்.**

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!*
*தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*


அதைப் போல நான்கு இடங்களிலும் ஊழியத்தை முடித்து ஜெபித்த போது, தேவன் தாம் சொன்னபடியே மழையை கட்டளையிட்டார். பின்பு, நாங்கள் தமிழ்நாடு திரும்பின பின்பு அங்கு இரவு பகலாய் மூன்று நாட்கள் இடைவிடாமல் மழை பெய்தது.

*ஆகவே, தளர்ந்த கைகளை நிமிர்த்தி தள்ளாடுகிற முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள், தேவன் உங்கள் ஜெபத்திற்கான பதிலை கொண்டு வருகிறார். இயேசுவின் நாமத்தில் ஏறெடுக்கப்படுகிற எல்லா ஜெபங்களும் நிச்சயமாக ஒரு நாள் பதிலை கொண்டு வரும். எந்த பிள்ளைக்காக, கணவருக்காக நீங்கள் அழுது புலம்புகிறீர்களோ அவர்களை ஒருநாள் பரலோகத்திற்கு ஆயத்தப்படுத்துவார். நீங்கள் விட்டுவிட்ட ஜெபத்தை விசுவாசத்தோடு மறுபடியும் துவக்குங்கள். எந்தக் காரியமானாலும் உங்கள் ஜெபம் அற்புதத்தை தேவனிடத்திலிருந்து கொண்டு வரும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!*



# பணித்தளச் செய்திகள்

## ஒடிசா மாநிலம்

### கோராபுட் மாவட்டம் படுவா பணித்தளம்

**தொட்டகுடா:**

- இக்கிராமத்தில் ஞாயிறுதோறம் ஆராதனை நடைபெற்று வருகிறது. 40க்கும் மேற்பட்ட விசுவாசிகள் ஆலயத்திற்கு வருகின்றனர். சபை விருத்தியடைய ஜெபியுங்கள்.
- தீமோ பங்கி என்பவருக்கு வயிற்றுவலியிலிருந்து கர்த்தர் விடுதலை கொடுக்க ஜெபியுங்கள்.
- சதா பங்கி, லச்சு பங்கி என்பவர்கள் பின்மாற்றமாகி ஆலயத்திற்கு வருவதில்லை. இவர்கள் மீண்டும் ஆலயத்திற்கு வரும்படி ஜெபியுங்கள்.
- அம்பி பங்கி என்பவர் புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்டு குடும்பமாக ஆலயத்திற்கு வருகிறார்கள். இவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.
- லசு பங்கி, துளாராம் பங்கி, அர்சோ கோரா, சமுனாத் பங்கி, கெசிரி பங்கி (பூசாரி), சன்னு பங்கி, கிமுண்டு பங்கி ஆகியோருக்கு சுவிசேஷம் அறிவித்து ஜெபித்து வந்தோம். இவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படி ஜெபியுங்கள்.

**டெங்கியாம்**

- இக்கிராமத்தில் இயேசுவைப் பற்றி அறிவித்தேன். இரண்டு குடும்பத்தினர் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆராதனைக்கு வருகின்றனர். இங்கு எதிர்ப்புகள் அதிகமாக உள்ளது. இவர்களுக்காக ஜெபியுங்கள்.

**ஹெமுலாகுடா:**

- தினோ மட்டம், ராமோ பாபு ஆகியோருக்கு இயேசுவைப் பற்றி அறிவித்தேன். சுவிசேஷத்திற்கு வாஞ்சையாக உள்ளார்கள்.

**நுவாபுட்:**

- தாமோ கோரா, பிபிசன் ஹந்தல் ஆகியோருக்கு இயேசுவைப் பற்றி அறிவித்தேன். இக்கிராம மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

**தொட்டகுடா:**

- இம்மாதம் (ஆகஸ்ட்) கடைசி ஞாயிற்றுக்கிழமையில் ஞானஸ்நான ஆராதனை நடைபெற உள்ளது. கொண்டகுடா, கிர்லிகுடா, ஜம்முகுடா, தொட்டகுடா கிராமங்களிலிருந்து 10 பேர்

ஞானஸ்நானம் பெற ஆயத்தமாக உள்ளனர். இவர்களுக்காக ஜெபியுங்கள்.

**கொண்டாகுடா:**

- இங்கு ஞாயிறு ஆராதனையில் 50 பேர் கலந்து கொள்கின்றனர். இங்கு இயேசுவை அறியாத ஜனங்கள் அநேகர் உண்டு. அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆலயத்திற்கு வரும்படி ஜெபியுங்கள்.
- ஜாக்கப் கிலோ என்பவர் கீழே விழுந்து கைகளில் அடிபட்டுவிட்டது. கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்
- ரஞ்சோ கிலோ என்பவருக்கு காய்ச்சலிலிருந்து கர்த்தர் விடுதலை கொடுக்க ஜெபியுங்கள்.
- லக்குமோ கிலோ என்ற சகோதரி கை,கால் வலியினால் கஷ்டப்படுகிறார்கள். கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- தாசு என்பவருக்கு தலைவலிலிருந்து கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- பிரேமா என்ற சகோதரி கர்ப்பமாக உள்ளார். இவருக்கு சரீரம் முழுவதும் பெலவீனமாக உள்ளது. கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- மொரியம் கிலோ என்பவர் கண்வலியால் கஷ்டப்படுகிறார். கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- ஜோகனோ சிந்தேரி என்பவர் ஒரு ஜீப் வாங்கியுள்ளார். இதன் மூலமாக செயல்படும் வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

## சுவிசேஷ ஊழியம்:

## கோராபுட் மாவட்டம், ஜெய்பூர் பணித்தளம்

**ஒந்தா:**

- பயாகுடா, பானுகுடா, பிரதானி குடா, பாலுகுடா, பல்லிகுடா, பூர்ணாபாணி, சொம்தாஸ்புட், ரங்ணிகுடா, ராணிகுடா, சொர்கிகுடா, சுனாரிகுடா, பங்காலிகுடா, பூர்டிபுட், கும்பார்புட், பலுகுடா 2, கொல்சாஹண்டி, சில்லிகுடா, டொமாபுட், ஒக்கில்குடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து கைப்பிரதிகள் கொடுத்தோம். இக்கிராமத்தை ஆளுகை செய்கிற அசுத்த ஆவியின் கிரியைகள் அழிக்கப்படவும், ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும் ஜெபியுங்கள்.

## கோராபுட் மாவட்டம் லம்டாபுட் பணித்தளம்

**பாவுஸ்குடா:**

- நமது பாவுஸ்குடா கிராமத்திலுள்ள விசுவாசிகள் லம்டாபுட் சபை ஆராதனையில் கலந்து கொள்கின்றனர்.
- இங்கு வெள்ளி உபவாச ஜெபம் நமது விசுவாசிகள் வீட்டில் வைத்து நடைபெறுகிறது.
- புஜ்ஜி என்ற சகோதரிக்காக கடந்த மாதம் ஜெபிக்கச் சொல்லியிருந்தோம். ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் அற்புத சுகம் கொடுத்தார். தேவனுக்கு மகிமை!

- ராஜா என்ற சகோதரனுடைய மகனை பள்ளியில் சேர்க்க கர்த்தர் உதவி செய்தார்.
- புர்னம்மா என்ற சகோதரிக்கு வாத நோய்க்காக இருப்பதால் ஜெபிக்கச் சொல்லியிருந்தோம். ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் அற்புத சுகம் கொடுத்தார். இந்த சகோதரிக்காக கர்த்தரை துதியுங்கள். இவர்கள் ஒரு வியாபாரம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். கர்த்தர் இவர்களை ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
- கம்மாயா என்ற சகோதரன் மிகவும் பின்மாற்றமாகி அடுத்த பெண்ணோடு தொடர்பு வைத்துள்ளார். ஆலயத்திற்கு வரவில்லை. இவரது வாழ்க்கையை கர்த்தர் சரிசெய்யும்படியாகவும், மீண்டும் ஆலயத்திற்கு வரும்படியாகவும் ஜெபிப்போம்.
- செல்லம்மா என்ற சகோதரியும் இவரது கணவன் குன்னயா என்ற சகோதரனும் அடிக்கடி சண்டைபோடுகின்றனர். இவர்களது குடும்பத்தில் கர்த்தர் சமாதானத்தைக் கொடுக்க ஜெபியுங்கள்.
- சுமன்ந்த் என்ற சகோதரன் ஞானஸ்நானம் பெற்று, கண்ணீரோடு ஜெபித்து வந்தான். ஆனால் இப்போது சில நாட்களாக மற்ற நண்பர்களோடு சேர்ந்து கொண்டு ஆலயத்திற்கு வருவதில்லை. மிகவும் பின்மாற்றமாகியுள்ளான். இவன் மீண்டும் ஆலயத்திற்கு வரும்படி ஜெபியுங்கள்.
- இக்கிராமத்தில் வாரம் ஒருமுறை வெள்ளிக்கிழமையில் வாலிபர்கள் கூடி ஜெபிக்கும்படி திட்டமிட்டுள்ளோம். இதற்காக ஜெபியுங்கள்.
- மனோஜ் என்ற சகோதரன் தனது கடையை பெரிதாக கட்டவும், ஒரு டீக்கடை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளார். கர்த்தர் இவர்களை ஆசீர்வதிக்க தடைகள் விலக ஜெபியுங்கள்.
- நாகமணி என்ற சகோதரியினுடைய சிறுபிள்ளைகள் மிகவும் காய்ச்சலினால் பெலவீனமாக உள்ளனர். கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.

**கங்கராபடா:**

- மாற்கு, ருக்குமணி என்பவர்கள் சரியாக ஆலயத்திற்கு வருவதில்லை. இவர்கள் உள்ளத்தில் கர்த்தர் கிரியை செய்ய ஜெபியுங்கள்.

**சங்குடிபடா:**

- ஜோசப் என்ற தகப்பனாரும் இவரது மனைவியும் சரியாக ஆலயத்திற்கு வருவதில்லை. இவர் தொடர்ந்து ஆராதனைக்கு வரும்படி ஜெபியுங்கள்.

**மலையங்கா:**

- இங்கு ஞாயிறுதோறும் ஆராதனை நடத்துகிறோம். கிராம மக்கள் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வரும்படி ஜெபியுங்கள்.

**காக்கல்படா:**

- மொரியம் என்ற சகோதரியின் அண்ணன் குடும்பத்தில்

எப்போதும் சண்டை வருகிறது. கர்த்தர் இவர்களது குடும்பத்திற்கு சமாதானம் கொடுக்க, இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

- ஜோசேப் என்ற சகோதரன் கடன் பிரச்சனையால் கஷ்டப்படுகிறார். இவரது கடன் அடைக்கப்படவும், தொழில் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- இப்போது காக்கல்படா விசுவாசிகள் சமாதானத்தோடு அனைவரும் ஓரிடத்தில் கூடி ஆராதிக்க வருகின்றனர். தேவன் ஜெபத்தைக் கேட்டார்.
- தாமஸ் என்ற சகோதரனுடைய மகன் மோகன் விசாகபட்டிணத்திற்கு வேலை பார்க்க சென்றுள்ளான். கர்த்தர் இவரை பாதுகாக்கவும், நல்ல வேலை கிடைக்கச் செய்ய ஜெபியுங்கள்.
- தேபேந்திரோ என்ற சகோதரன் சரியான மனநிலை இல்லாமல் பேசுகிறான். பில்லி சூனிய செய்திருப்பதாக இவனது பெற்றோர் கூறுகின்றனர். எல்லா மந்திர வல்லமைகள் அழிக்கப்படவும், இந்த வாலிபன் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவும் ஜெபியுங்கள்.
- ராஜன் என்ற சகோதரன் வீடு கட்டியுள்ளார். பூச்சு வேலை செய்ய பணம் இல்லை. எனவே வேலை அரைகுறையாக நிற்கிறது. கர்த்தர் தேவைகளை சந்திக்க ஜெபியுங்கள்.
- மொரியம் என்ற தாயார் மிகவும் வயதானவர்கள். மிகுந்த பெலவீனமாக உள்ளார்கள். இவர்களது பிள்ளைகள் இவரை சரியாக கவனிக்கவில்லை. இவர்களுக்காக ஜெபியுங்கள்.

**லம்டாபுட்:**

- கர்த்தருடைய பெரிதான கிருபையால் நவ்சின், எபன் என்ற மாணவர்கள் 10ம் வகுப்பில் தேர்ச்சியடைய கர்த்தர் கிருபை செய்தார்.
- ராஜீவ் என்ற சகோதரன் ஞானஸ்நானம் பெற்றுள்ளார். இவர் கர்த்தருக்குள் நிலைத்திருக்க ஜெபியுங்கள். இவரது மனைவி ஒன்பது மாத கர்ப்பமாக உள்ளார். ஏற்ற நேரத்தில் கர்த்தர் சுகப்பிரசவத்தை அருள ஜெபியுங்கள்.
- கீத்தா என்ற சகோதரி அதிக நாட்களாக ஆராதனைக்கு வராமல் இருந்தார்கள். இப்போது கடந்த வாரம் ஜெபத்திற்கு வந்தார்கள். இவர் தொடர்ந்து ஆராதனைக்கு வரும்படியாக ஜெபியுங்கள். இவர்களது கணவன் இவரை மிகவும் தடை செய்கிறார் இவர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- சொரூப்பா என்ற சகோதரியின் திருமணத்திற்காக ஜெபியுங்கள். இவர்களுக்கு அம்மா இல்லை. அநேக வரன் வந்தும் எதுவும் சரியான படி வாய்க்கவில்லை. இந்த சகோதரிக்கு திருமண தடை நீங்கி சீக்கிரம் திருமணம் நடைபெற ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. போதைப்பொருட்களை விற்பனை செய்பவர்களின் சொத்துகளை முடக்க வேண்டும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.
2. 11ம் வகுப்பு பொதுத்தேர்வை ரத்துசெய்யும் எண்ணம் இல்லை என்றும் மாணவர்கள் இந்த விஷயத்தில் குழம்ப தேவையில்லை என்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.
3. நாட்டின் 14வது துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர் பதவி ஏற்றார். பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் விழாவில் பங்கேற்று அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.
4. அமெரிக்காவில் எப்.பி.ஐ. அலுவலகத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்த முயன்ற நபரை போலீசார் சுட்டுக்கொன்றனர்.
5. தைவானை கைப்பற்ற படை பலத்தை பயன்படுத்துவோம் என சீனா மிரட்டல் விடுத்துள்ளதால் இருநாடுகள் இடையே மேலும் பதற்றம் அதிகரித்துள்ளது.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
"CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM,
CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**
Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

| தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள் | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 98435 80077 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஒசூர் | – 94869 07831 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 94869 07831 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 98435 80077 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.





கோராபுட் மாவட்டம் ஜெய்பூர் பணித்தளத்தில் சுமார் 200 கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்த நமது சுவிசேஷ குழுவினர்.



Registered Newspaper RNI No. TNTAM/03/15637
Date of publication on 10.08.2022. Posted at Mudalur P.O., Toothukudi Dist. - 628 702 on 14th and 15th of every month.

சால்வேஷன் மிஷனெரி ஊழியங்கள் நடத்தும்

ஓசூரில்

# மிஷனெரி
# பிரதிஷ்டை ஆராதனை

**28.08.2022**
**ஞாயிற்றுக்கிழமை**
காலை 7.30 மணி

புது கிருபை இயேசு நம்மோடு சபை,
ஓசூர்.



தேவ செய்தி

சகோ.
## T. ஆசீர் ஞானராஜ்

தொடர்புக்கு: போதகர் L.ஜோசப், போதகர் S.ஜார்ஜ் - 94439 81876

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to
**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 96294 99532**